

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (24.10.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை–2024” மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், அதிக பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் இரண்டாமிடத்தை பெற்ற செங்கல்பட்டு மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். அருண்ராஜ், விளையாட்டு வீரர்–வீராங்கனைகள், மண்டல முதுநிலை மேலாளர் மற்றும் மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆகியோர் கோப்பையை பெற்று கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (24.10.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை–2024” மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், அதிக பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் மூன்றாமிடத்தை பெற்ற கோயம்புத்தூர் மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, விளையாட்டு வீரர் – வீராங்கனைகள், மண்டல முதுநிலை மேலாளர் மற்றும் மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆகியோர் கோப்பையை பெற்று கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு போம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை–2024” மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில் பாரா ஒளிம்பிக் போட்டியில் பதக்கங்கள் வென்ற வீரர், வீராங்கனைகளை சிறப்பிக்கும் வகையில் படைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட கலைக்குழுவின் கலை நிகழ்ச்சியை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை–2024” மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கி நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்’

# எதிர்கால சர்வதேச வீரர், வீராங்கனையரை அடையாளம் காட்டி இருக்கின்றன!

## நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிறைவு விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை,அக்.26 -**

**சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்-2024 நிறைவு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கிட, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழாவுக்கு வந்திருந்தவர்களை வரவேற்று பேசினார்.**

**அப்போது சர்வதேச விளையாட்டு வீரர் வீராங்கனைகளை முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் அடையாளம் காட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் கோப்பை-2024 விளையாட்டுப் போட்டிகள் நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழாவில், பங்கேற்று உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அமைகிறேன். பெருமை அடைகிறேன்.

### விளையாட்டுப் போட்டிகள்

கிட்டத்தட்ட ஒரு மாத காலத்திற்கு மேல், நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் இன்றுடன் நிறைவுபெறுகின்றன. இறுதிப் போட்டிகள் தான் நிறைவு பெறுகிறதே தவிர, இங்கு வெற்றிகளைக் குவித்துள்ள விளையாட்டு வீரர்கள், உங்கள் ஒவ்வொருக்கும் விளையாட்டுத் துறையில் அடுத்த கட்டப்பயணம் இங்கு துவங்க இருக்கிறது.

தமிழ்நாட்டில் விளையாட்டினை ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாகப் போற்றிடும் வகையில், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை நாம் நடத்திக் காட்டி இருக்கிறோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஒவ்வொரு துறையிலும் தமிழ்நாட்டை இன்றைக்கு முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டி இருக்கிறது.

### `தமிழ்நாட்டின் ஒலிம்பிக்’

குறிப்பாக, நம் முதலமைச்சரின் வழிகாட்டுதலில் இந்தியாவின் விளையாட்டுத்துறைத் தலைநகராக தமிழ்நாடு உருவெடுத்துக் கொண்டு வருகிறது. அதற்கு ஒரு சிறந்த உதாரணம்தான் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்.

`தமிழ்நாட்டின் ஒலிம்பிக்’ என்று சொல்கின்ற அளவிற்கு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மிகப் பிரமாண்டமாக நடத்திக் காட்டி இருக்கிறோம். முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை உலகத் தரத்தில் நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டதோடு மட்டுமில்லாமல், நம் முதலமைச்சர் அவர்கள் 83 கோடி ரூபாயை அதற்கு ஒதுக்கித் தந்தார்கள். பரிசுத்தொகை மட்டுமே 37 கோடி ரூபாய் வழங்கச் சொன்னார்.

### முதன்மை மாநிலம்

இந்திய ஒன்றியத்திலேயே ஒரு மாநில அரசால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் அதிக வீரர்கள் கலந்துகொள்வதிலும், அதிக பரிசுத் தொகை வழங்கப்படுவதிலும் முதன்மை மாநிலம் தமிழ்நாடுதான். இதற்காக, நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பாகவும், விளையாட்டு வீரர்கள் உங்களின் சார்பாகவும் நம் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை, விளையாட்டை எப்போதுமே கூடுதல் பாடத்திட்டச் செயல்பாடுகளாகப் பார்க்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், அவர் விளையாட்டை இணைப் பாடத்திட்டச் செயல்பாடுகளாகக்கூட பார்க்கவில்லை. முக்கியப் பாடத்திட்டச் செயல்பாடாகத்தான் பார்த்து முக்கியத்துவத்தைக் கொடுத்து வருகிறார்.

சென்ற ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 6 லட்சத்து 71 ஆயிரம் பேர் கலந்து கொண்டார்கள். இந்தாண்டு 11 லட்சத்து 56 ஆயிரம் பேர் விண்ணப்பித்து, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார்கள்.

### மாணவர்கள்– இளைஞர்கள் ஆர்வம்

மாணவர்கள், இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினரையும் விளையாட்டுத் துறையில் ஆர்வம் காட்டுவதற்காக, மாநில அளவிலான போட்டிகளை மட்டுமல்ல, சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளையும் நாம் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.



கிராம அளவில் விளையாட்டுத்துறைச் சாதனையாளர்களைத் தயார்படுத்த வேண்டும் என்று `டாக்டர் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, `டாக்டர் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை 86 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்து 525 ஊராட்சிகளுக்கும் 33 வகையான ஸ்போர்ட்ஸ் கிட் உபகரணங்களைத் தொகுத்து வழங்கி வருகிறோம்.

### சாம்பியன்ஸ் அறக்கட்டளை

விளையாட்டில் சாதிக்கத் துடிக்கின்ற வீரர்களுக்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்று நம் முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷனை சென்ற ஆண்டு தொடங்கி வைத்து, அந்த மேடையிலேயே அவரின் சொந்தப் பணமாக 5 லட்சம் ரூபாயைக் கொடுத்து, பெருமைப்படுத்தினார். அந்தத் திட்டம் தொடங்கி, ஒன்றரை வருடத்தில் இன்றைக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் வாயிலாக 700 வீரர்களுக்கு 12 கோடி ரூபாய் அளவிற்கு நிதியுதவியை வழங்கி இருக்கிறோம்.

நிதியுதவியுடன் செல்லும் நம் விளையாட்டு வீரர், வீராங்கனை கள் பதக்கங்களுடன் திரும்பி வந்து பெருமை சேர்த்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும், இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த மூன்று ஆண்டுகளில் 3 ஆயித்து 330 வீரர்களுக்கு 109 கோடி ரூபாயை, உயரிய ஊக்கத்தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி பெருமைப்படுத்தி இருக்கிறார்.

### மூன்று குணங்கள்

விளையாட்டு வீரர்களுக்கு முக்கியமான தகுதிகள், `நேரம் தவறாமை’, `ஒழுக்கம்’, `மன உறுதியுடன் கூடிய தொடர் பயிற்சி’ என மூன்றையும் சொல்வார்கள். இந்த மூன்றும் இருந்தால்தான் விளையாட்டில் சாதிக்க முடியும். இங்கு இத்தனைப்பேர் வெற்றிப்பெற்று வந்து இருக்கிறீர்கள் என்றால், இந்த மூன்று குணங்கள் மட்டுமல்ல அதையும் தாண்டி, விடாமுயற்சி என்ற முக்கியமான குணத்தையும் நீங்கள் அனைவரும் பெற்று இருக்கிறீர்கள்.

அந்த வகையில், முதல் மூன்று இடங்களைப் பிடித்த சென்னை, செங்கல்பட்டு, கோவை மாவட்ட வீரர், வீராங்கனையருக்கு எங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோல், முதல் மூன்று இடங்களுக்குள் இந்த ஆண்டு வர முடியாமல் போனாலும், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அத்தனை வீரர்களுக்கும் எங்கள் பாராட்டுகளும், வாழ்த்துகளும் உரித்தாகட்டும். வரும் ஆண்டுகளில், நீங்களும் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். உறுதியோடும், பயிற்சியோடும் மீண்டும் வாருங்கள், உங்களுக்கான களம் காத்திருக்கிறது.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்காக மாவட்ட, மண்டல, மாநில அளவில் ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்த அனைத்து அதிகாரிகள், பணியாளர்கள், தன்னார்வலர்கள், இதில் முக்கிய பங்குவகித்த எஸ்.டி.ஏ.டி மாணவர்கள் அனைவருக்கும் எங்கள் வணக்கத்தையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### வாழ்த்துக்கள்

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் எதிர்கால, சர்வதேச வீரர், வீராங்கனையரை அடையாளம் காட்டி இருக்கிறது. இதில் பங்கேற்ற வெற்றிப்பெற்ற அத்தனை வீரர், வீராங்கனையருக்கும் எங்களின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தச் சிறப்புக்குரிய நிழச்சிக்கு வருகை தந்து, எங்களைப் பெருமைபடுத்தியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மீண்டும் வருக, வருக என வரவேற்று மகிழ்கிறேன். அதேபோல், அமைச்சர் பெருமக்கள், மேயர், துணை மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகளை வரவேற்று மகிழ்கிறேன்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேடையில் அமர்ந்திருக்கின்ற விளையாட்டுச் சாதனையாளர்கள் மாரியப்பன் தங்கவேலு அவர்களுக்கும் மற்றும் சரத் கமல் ஆகியோரையும் வரவேற்று மகிழ்கிறேன். இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களையும் வருக, வருக என வரவேற்று மகிழ்கிறேன்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இங்கு பெருந்திரளாகக் கூடி இருக்கின்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனையர்கள், எஸ்.டி.ஏ.டி விடுதி மாணவர்கள் அனைவரையும் வரவேற்று மகிழ்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




**முதல்வரின் வழிகாட்டுதலில் இந்தியாவின் விளையாட்டுத் துறைத் தலைநகராக தமிழ்நாடு உருவெடுத்துக்கொண்டு வருகிறது.**

**அதற்கு ஒரு சிறந்த உதாரணம்தான், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள். ‘தமிழ்நாட்டின் ஒலிம்பிக்’ என்று சொல்கின்ற அளவிற்கு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மிகப் பிரமாண்டமாக நடத்திக் காட்டி இருக்கிறோம்.**